நொச்சூர் ஆசிரம வெளியீடு.

ஓம்.

அகஸ்தியர் அருளிய

# ஹரி குண மாலை.

"என்கவி மாலையிதோ — அணிவாய்
என்றும் இருப்பவனே."

பதிப்பாளர்
சிவயோகி ஸித்தானந்தா,
நொச்சூர் ஆசிரமம்,
கொடுவாயூர் போஸ்டு, பாலக்காடு.

1957.

நொச்சூர் ஆசிரம வெளியீடு.

ஓம்.

அகஸ்தியர் அருளிய

# ஹரி குண மாலை.

"என்கவி மாலையிதோ — அணிவாய்
என்றும் இருப்பவனே."

பதிப்பாளர்
சிவயோகி ஸித்தானந்தா,
நொச்சூர் ஆசிரமம்,
கொடுவாயூர் போஸ்டு, பாலக்காடு.

1957.

ஓம்.

# ஆசியுரை

திருப்புகழ் ஜோதி, திருப்புகழ் மணி

**பிரமஸ்ரீ T. M. கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்கள்**

ஸ்ரீ சிவயோகி ஸித்தானந்த ஸ்வாமிகள் தமிழ் உலகுக்கு எதிர்பாராத ஓர் சிறந்த ஸேவையைச் செய்து வருகின்றார். அகஸ்திய மஹரிஷி தமிழைப் பெற்று, எளிதான சொற்களால் யாவரும் அறியும்படியும், உணரும்படியும் தமிழ்ப் பாடல்கள் செய்திருக்கின்றனர். அந்தப் பாடல்கள் வெளிவராமலும் பெரும்பாலோர்களுக்குத் தெரியாமலும் கிடந்துவிட்டன. அந்தப் பாடல்களை அகப்பட்டபோதெல்லாம் எடுத்துச் சிறு புத்தகங்களாய் வெளியிட்டு வருகின்றார் நமது ஸ்ரீ ஸித்தானந்த சிவயோகி, தமிழ்நாட்டின் நன்றிக்கு உரியவராய்விட்டார்.

இந்தப் பாடல்களின் மகத்துவம்தான் என்ன! வாசிக்கத் தெரியாதவர்கள் கேட்டாலும் போதுமே. பக்தியும் ஞானமும்ஒருங்கே உணர்விக்கின்றன. உபநிஷத் வாக்கியங்கள்போல் சிறு அடிகளில் தத்துவத்தை இதயபூர்வமாக உபதேசிக்கின்றன. எல்லாப் பாடல்களையும் தனித் தனியாகவும், தொகுதியாகவும் வெளியிட்டுவர ஸ்ரீ சிவயோகி அவர்களை வேண்டுகின்றேன். சில பாடல்கள்தான் நான் பார்த்தது. உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் ஆர்வமும், தத்துவ உண்மைகளும் பொதிந்து கிடக்கின்றன. முருகன் அருளால் எல்லாரும் பாடி உபதேசித்து, நாடு சுத்தமான இதயத்தோடு வாழ்ந்து ஆனந்திக்குமாறு இறைவனை யான் வேண்டுகிறேன்.

# பொருளடக்கம்.


அ] விநாயகர் வணக்கம்.

ஆ] குருவணக்கம்.

1. ஸரஸ்வதி
2. ஹரி நாராயண
3. கலியுக மருந்து
4. ஹரிநாமம்
5. எவர்க்கும் கிடைக்கும் தரமோ?
6. ஓம் நமோ நாராயணாய
7. நாராயண விபூதி
8. ஹரிகுண மகிமை
9. உலகம் முழங்குக
10. நாவெல்லாம் பாடுவோம்
11. நாராயணா ரங்கநாத
12. ஜீவக்கிளியே!
13. மதுராக்ஷர மாதவன்
14. ஜெய பகவான்
15. நாராயண ப்ரம்மம்
16. மனமெனும் வயல்
17. அலையும் கடலில்
18. நாதா ஸ்ரீ வைகுண்ட வாஸா
19. நாராயணா ஹரி நாராயணா
20. சிந்தனை
21. நாராயணாய நமவே
22. நல்லவழி
23. அந்தியம் என்முன் வந்தருள்வாயே!
24. மஹாலக்ஷ்மியை அழைத்தல்
25. பராசக்தி
26. யுகாந்த நடனம்
27. ஸ்ரீ சக்ர நாயகி
28. அம்மா!
29 மலைதோறும் விளங்கும் மாணிக்க மைந்தன்


சுபம்.

ஓம்

# ஹரி குண மாலை.

## விநாயகர்.

பூத்திருக்கும் நாமமும் புகுந்திருக்கும் நாமமும்
சேர்த்துவைக்கும் நாமமும் ஜெகத்துளாடும் நாமமும்
பார்த்த திக்கெலாம் தன்ஏகரூபமாய்ப் பரந்துநின்று
காத்திருக்கும் நாமமும் கணேசராஜ நாமமே.

---

## குருவணக்கம்,

திருநாதனும் சதுரானனும் தேடித்தேடி இன்னும்
ஒருவாறும் முன்கண்டுணராப் பரம்பொருள் ஒருருவாய்க்
கருணைகடாக்ஷ மகத்துவத்தா லென்னைக் காத்தருளக்
குருநாதனாய் எனக்குள்ளே புகுந்து குடிகொண்டதே.

ஓம்.

# ஹரி குண மாலை.

## 1. ஸரஸ்வதி.

1. வண்டார் குழலீ வாணி என்தாயே,
வாழ்க வாழ்க நினதருளே
வெண்டாமரை எனதுள்ளமாக நீ
வீணையை மீட்டிடுவாயே—உன்
வீணையை மீட்டிடுவாயே.

2. கருணையின் கனியே கலைகளின் நிலையே
காணவேண்டும் நினதுருவே
வருக வருக எனதிதய மலரிருந்து
மங்களமே தருவாயே—உன்
வீணையை மீட்டிடுவாயே.

3 அறியாமை இருள் மனமாயை அற
அருணோதயமாய் வருவாய்
சிறியேனையுமோர் பொருளாய்க் கருதிஎன்
ஜீவனை மீட்டிடுவாயே—உன்
வீணையை மீட்டிடுவாயே

4. உனதருட்பார்வையின் அருள்பெறும் ஊமையும்
உபநிஷதம் பொழிவானே
எனதிதயம்தனில் என்றும் இருந்து நீ
இன்னிசை செய்திடுவாயே—உன்
வீணையை மீட்டிடுவாயே.

5. பொருள் உளதாயினும் அறிவில்லையானால்
பொன்னுள வானர மலவோ—என்
இருநயனங்களும் அறிவொளி வீசிட
இயலிசையாய் வருவாயே—உன்
வீணையை மீட்டிடுவாயே.

6. கோடிகோடிகவி பாடிடுவேன் தமிழ்க்
கோகிலமே வருவாயே
எனதிதயம் ப்ரணவத்வனி செய்திடும்
ஏக சுகம் தருவாயே—உன்
இசைஅமுதம் பொழிவாயே—உன்
வீணையை மீட்டிடுவாயே.

7. ஸத்தியவாழ்க்கையினால் உலகெங்கிலும்
சாந்தியோங்க வரம்அருள்வாய்
ஸங்கீதாமுத தாரையினாலெனைத்
தன்மயம் ஆக்கிடுவாயே—இனி
சாகாக்கலை தருவாயே—உன்
வீணையை மீட்டிடுவாயே.

8. கருவுடல்போயினும் கவியுடல் எய்திநான்
காலம் முழுதும் நிலைபெறுவேன்
ஹரிநாராயண சிவசிவ குஹஎனும்
நாமரஸம் தருவாயே—பர
நாதலயம் தருவாயே—என்
நாவில்நடம் புரிவாயே—உன்
வீணையை மீட்டிடுவாயே.

## 2. ஹரிநாராயண.

1. ஹரிநாராயண ஹரிநாராயண
ஹரி ஹரி நாராயணாய நமஓம்
நாதப்ரம்ம ஸொரூபமிதே என்
நாவே நீ மொழிவாய்—ஹரிஎன
நாவே நீ மொழிவாய்—நாராயண
நாமஜெபம் புரிவாய்.

2. விஷயவிசார விகார விஷங்களால்
வேதனைமிக அடைந்தாய்—வீணுரையினால்
நாவே நீ உலர்ந்தாய்—இனி
வெம்மை அகன்றுவிட விரும்பிவிரும்பிச் சொல்வாய்
நாராயண ஹரிஓம்—நமோ நமோ
நாராயண ஹரிஓம்—அமுதமிதே
நாராயண ஹரிஓம்.

3. காமக்ரோதவெயில் கடுமையினால்அந்தோ
கசிவற்றுத் தளர்ந்துவிட்டாய்—அருள்
தாமரைமலர்ந்த தடாகமிதோ சொல்வாய்
நாராயண ஹரிஓம்—நமோநமோ
நாராயண ஹரிஓம்—அமுதமுதே!
நாராயண ஹரிஓம்.

4. பொருள்புகழ்விரும்பியே பொழுதெலாம் பலப்பல
புலம்பிப்புலம்பித் தவித்தாய்—அந்தத்
திருமகள் பருகிய திவ்யானந்த நாமம்
நாராயண ஹரிஓம்—நமோநமோ
நாராயண ஹரிஓம்—அமுதமிதே
நாராயண ஹரிஓம்.

5. பக்தரக்ஷகனவன் பரமதயாளனவன்
பரமபுருஷனவனே—வேதம்சொலும்
பரமபுருஷனவனே
நர்த்தனம்செய்தெந்நாளும் நாரதர் பாடுகின்றார்
நாராயண ஹரிஓம்—நமோநமோ
நாராயண ஹரிஓம்—அமுதமிதே
நாராயண ஹரிஓம்.

## 3. கலியுக மருந்து

1 ஹரிபஜனம் ஹரிபஜனம் ஹரிபஜனம் ஒன்றே
கலியுகத்தில் ஔஷதமாய்க் கருணைசெயும் இன்றே

2. பக்தரெலாம் பரவசமாய்ப் பாடுகின்றநாமம்
சித்த சுத்தி தந்தருளும் தெய்வமணி நாமம்

3. உடல்முழுதும் இன்பரஸம் ஊற்றுகின்ற நாமம்
இடையருமல் என்னுளத்தே இலங்குகின்ற நாமம்

4. கமலமுகம் கருணைவிழி காட்டுகின்ற நாமம்
எமபயத்தை நீக்கவல்ல எம்பெருமான் நாமம்

5. பாற்கடலில் பாம்பணைமேற் பள்ளிகொண்ட நாமம்
ஆச்சரிய மாயை எலாம் ஆற்றுகின்ற நாமம்

6. ஆதிசேஷசயனநாமம் ஆதியான நாமம்
ஜோதியான நாமமிதே ஸுந்தரமாம் நாமம்

7. மாமுனிவர் காதலிலே வளர்ந்த ஹரிநாமம்
பூமகளின் திருவுளத்தே பொங்கிவரும் நாமம்

8. ஓம்நமோநாராயணாய ஓம்நமோநாராயணா
உலகெலாம் முழங்கவேண்டும் ஓம்நமோநாராயணா.

9. ஹரிபஜனம் ஹரிபஜனம் ஹரிபஜனம் செய்வோம்
இடைவிடாமல் எண்ணி எண்ணி இப்பொழுதே உய்வோம்
நீலமேக வடிவழகை நித்தியமும் காண்போம்
நேரமெலாம் பாடியாடி நிர்ப்பயமாய் வாழ்வோம்.

## 4. ஹரிநாமம்.

1 ஆதிஅயனொடு தேவர்முறையிட ஆசிதருவது ஹரிநாமம்
ஆவிபிரிவுறும் வேளைவிரைவினில் ஆளவருவது ஹரிநாமம்
ஓதும்அடியவர் நாவில்அமுதென ஊறிநிறைவது ஹரிநாமம்
ஓலமிடு கஜராஜன் விடுபட ஓடிஅருள்வது ஹரிநாமம்

வேதமுடியிலும் வேள்விமுடிவிலும் மேவிஉறைவது
ஹரிநாமம்
வீசும்அலைகடல் சேஷன்நிழல்செய நீடுதுயில்வது
ஹரிநாமம்
நாதஜெயஜெகந்நாத நமவெனநாளும் அவனடி
பணிவோமே
நாமபஜனையில் நாமமகிமையால் நாதனவனருள்
பெறுவோமே

2 பூதகண பரிவாரபரசிவ பூஜைபெறுவது ஹரிநாமம்
பூமிபுவனமும் ஏகபதமளவாக வளர்வதுஹரிநாமம்
தாதைதொடுமிட மேதுமவனுளன் தேவன்எனும்
மகனுரைபோலே
தாக நரம்ருக கோர வடிவொடு தூணிலெழுவது
ஹரிநாமம்
காதலொடு கவி பாடுமடியவர் காணவருவது
ஹரிநாமம்
காலநிலை கருதாது துதிசெயத் தாவி வருவது
ஹரிநாமம்
ஏதுவிலகினும் ஏதுதொடரினும் ஈசனவனருள்
நினைவொன்றே
ஏறியநுபவமீறி அனைவரும் ஏகபஜனையில்
மகிழ்வோமே

## 5. எவர்க்கும் கிடைக்கும் தரமோ ?

1 எவர்க்கும் கிடைக்கும் தரமோ—ஹரிபஜனம்
எளிதில்கிடைக்கும் தரமோ - சொல்வாய் நெஞ்சே
தவத்திற்சிறந்துலகில் அனைத்தும் துறந்துதாமும்
தனிமையில் அரிகளி றுழுவையும் அலைதரும்
அடவியில் உடல்மறைபடு புதலமையினும்
(எவர்க்கும்)

2 அறிந்திடவேண்டுமென்றால் அருகில் அழைத்துப்
பாராய்
அவர்க்கது ருசிக்காமல் அப்புறம் சென்றிருப்பார்
நிறைந்தபொன் இருந்தாலும் பெருங்கலைமிகுந்
தாலும்
நெகிழநெகிழமனம் உருகியுருகிவிழி
நிறைய நிறைய உடல்புளகமும் இலையெனின்
(எவர்க்கும்)

3 அமர்ந்து நெடுங்குரலில் அயல்மனையாளருடன்
அலுத்தபழங்கதைகள் நினைத்துநினைத்து சொல்வார்
நிமலனைப்பாடவென்றால் நேரமே இல்லையென்பார்
இவர்கள் நமதுவழி வருதல் கடினம் மனம்
இறுகுமனிதர் துயர் அடைவர் முடிவரலால்
(எவர்க்கும்)

4 தனம்கனம் தாங்கிஎன்ன ஜபம்பல செய்துமென்ன
மனங்கனியாதிருந்தால் வளர்ந்த மரத்தை ஒப்பார்
மலரும்கனியும்இன்றி வளர்ந்த மரத்தை ஒப்பார்
மூலமுதற்கடவுள் முகுந்த நாராயணன்
அலையுமனமும் நிலையடைய முழுவடிவு
கருணைதெரிய வசமிசைய அருளினல்லால்
எவர்க்கும் கிடைக்கும் தரமோ—ஹரிபஜனம்
எளிதில் கிடைக்கும் வரமோ.

## 6, ஓம் நமோநாராயணாய.

1 ஓம்நமோநாராயணாய ஓம்நமோநாராயணாய
ஓம்நமோநாராயணாய ஓம்நமோநமோ

2 ஸகலலோக சாக்ஷியாகி ஸகலவேதஸாரமாகி
ஸகலயோக ஸித்தியாகி நின்ற மூர்த்தியே
ஸகலதத்துவங்களாகிப் பரமஞான வித்தையாகி
ஸத்லசப்தவடிவமாகி வந்தமூர்த்தியே

3 அகுணஸகுண நிலையிலாகி அசரசரவிபாகமாகி
அதிலுமாகி இதிலுமாகி அமையும் மூர்த்தியே
அணுவுளே அகண்டமாட அணுவினுலணைத்தும்ஆட
அபரநாத வடிவிலாடும் அருணமூர்த்தியே.

4 எனதுநானெனச்செருக்கி மமதைஉற்றலைந்தஎன்னை
இனியனுக்கி இணையவைத்த இன்பமூர்த்தியே
எனதுளத்திலுனது நாமம் எழுதிவைத்து நடனமாடி
ஏகமாய் எனைக்கலந்த யோகமூர்த்தியே.

5 படிஎலாங்கடந்த சுத்தபிரமவஸ்துவாய் இருந்தும்
பஜனையால் மகிழ்ந்து தோன்றும் கருணை
மூர்த்தியே
ஒருகணத்துள் எனதுளத்தை உருகவைத்த
உனதுநாமம்
ஓம்நமோநாராயணய ஓம்நமோநமோ.

6 அளவிலாமல் எழுவிசார அலையடித்த மருளகற்றி
அமைதிபெற்றடங்கவைத்த அன்புமூர்த்தியே
ஒருகணத்துள் எனதுளத்தை உருகவைத்த உனது
நாமம்
ஓம்நமோநாராயணய ஓம்நமோநமோ.

## 7. நாராயண விபூதி.

1 உடலென்ற போர்வைக்குள் ஒளி கின்ற நானுர்
நரரூபமாய்வந்த நாராயணன் நான்
அடர்ஐந்து கோட்டைக்குள் அரசாளும் நானுர்
நரரூபமாய்வந்த நாராயணன் நான்

2 மனமென்ற கடல்மீது வளர்கின்ற நானுர்
நரரூபமாய்வந்த நாராயணன் நான்
அனல்நின்ற பொருள் சேஷசயனத்தோன் நானுர்
நரரூபமாய்வந்த நாராயணன் நான்

MAHAMAHOPADHY

3 தொழில்யாவுமே செய்து துயில்கின்ற நானூர்
நரரூபமாய்வந்த நாராயணன் நான்
அழியாத தனிமூல வடிவான நானூர்
நரரூபமாய்வந்த நாராயணன் நான்

4 உலகெங்கும் உயிரெங்கும் உறைகின்ற நானூர்
நரரூபமாய்வந்த நாராயணன் நான்
பலவேஷமும் பூண்டு பயில்கின்ற நானூர்
நரரூபமாய்வந்த நாராயணன் நான்

5 முளையாத முடியாத முதலான நானூர்
நரரூபமாய்வந்த நாராயணன் நான்
இளையாத தளராத இயல்பான நானூர்
நரரூபமாய்வந்த நாராயணன் நான்

6 வாடாது குவியாது மகிழ்கின்ற நானூர்
நரரூபமாய்வந்த நாராயணன் நான்
கூடாது குறையாது நிறைவான நானூர்
நரரூபமாய்வந்த நாராயணன் நான்

7 பசிதாகம் அறியாத பரமாத்மனே நான்
பகலற்ற இரவற்ற பரிபூர்ணமே நான்
அஜபாவில் நடமாடும் அருளின்பமே நான்
ஆனந்த நிலைகாணும் அநுபூதியே நான்

8 தேனாய் இனிக்கின்ற சிவசக்தியே நான்
தேகத்தில் விளையாடும் ஜீவாத்மனே நான்
நானாவிதம் தோன்றும் ஞானாத்மனே நான்
நரரூபமாய்வந்த நாராயணன் நான்

9 ஓம்நமோ பகவதே நாராயணாய
உலகெங்கும் நினதாடல் உளதென்று பணிவேன்
ஓம்நமோ பகவதே நாராயணாய
உனையன்றி இலையென்ற நிலைகண்டுதொழுவேன்

10 அதிர்கின்ற திரையாழி அபிஷேக நீராம்
ஆராதனைக்கிங்கு தாராகணங்கள்
கதிரோன் உனக்கேற்ற கற்பூரதீபம்
காணும் ப்ரபஞ்சமோ மாயாவினோதம்

11 உதயத்தில் ஒளியாகி உலகம் தரிப்பாய்
யுககாலமுடிவில் ஒவ்வொன்றும் பிரிப்பாய்
இதயத்துனைக்கண்ட பின்பேது மாயம்
எப்போதும் நீவந்து செய்வாய் ஸஹாயம்.

12 ஓம் நமோபகவதே நாராயணாய
உயிருக்குள் உயிரான உனதுண்மை கண்டேன்
ஓம் நமோபகவதே நாராயணாய
ஓயாத லீலா விபூதி இது கண்டேன்

## 8. ஹரிகுண மகிமை.

1 அநாதிவேதமும் புராணமும்சொலும்
அபூர்வ குணநாமம்
ஸதாஎன்நாவினில் நிலாவியே எனை
விடாத ஹரிநாமம்

2 மாமுனி நாரத வீணையில் ஊறிய
மங்களமய நாமம்
நானறியாதெனை ஆண்டருள் தந்தெனை.
விடாத ஹரிநாமம்

3 உத்தமன் இட்ட தலத்தினில் அக்கணம்
உதித்த திருநாமம்
பக்திஇலாத எனக்கும் இசைந்தெனை
விடாத ஹரிநாமம்

4 ஆதி மூலமெனும் மாமத யானையை
அருள வந்த நாமம்
ஏதுமிலாத என் இதயமிருந்தெனை
விடாத ஹரிநாமம்

5 சராசரங்களில் எலாம் நிறைந்துள
மகா புனித நாமம்
கெடாதவாறருள் நடாவியே எனை
விடாத ஹரிநாமம்

6 மகாஜெபம்செயும் நிஜாநுபூதியில்
மனோரமணநாமம்
ஸரோஜ மோகன ஸொரூபமாய் எனை
விடாத ஹரிநாமம்

## 9. உலகம் முழங்குக.

1 ஓம்நமோநாராயணாய ஓம்நமோநாராயணா
ஓம்நமோநாராயணாய ஓம்நமோநாராயணா

2 பிறவிதோறும் வினைமிகுந்து பெருகுகின்ற இருளினை
அகலவைக்கும் அருணதீபம் ஓம்நமோநாராயணா

3 ஊறுதுன்பம் உடல்வியாதி ஊழ்விடாத வறுமையும்
ஆறவைக்கும் அருள் மருந்து ஓம்நமோநாராயணா

4 ஏக்கமாம் குழிக்குளே இருண்டுருண்ட வேளையில்
தூக்கிடும் துணைக்கரங்கள் ஓம்நமோநாராயணா

5 சோகமோக தாகமீறிச் சோர்வுவிஞ்சும் வேளையில்
கருணையான புனிதகங்கை ஓம்நமோநார்ாயணா

6 ஜனனமரண பயதரங்க ஸாகரம் கடத்தியே -
உடனுவந்துகாக்கும் ஓடம் ஓம்நமோநாராயணா

7 கடுகடுத்து முனைதொடுத்த காலசூலமெதிறுநாக
உயிர் தடுத்த கவசமாகும் ஓம்நமோநாராயணா

8 ஓம்நமோநாராயணாய ஓம்நமோநாராயணா
உலகெலாம் முழங்கவேண்டும் ஓம்நமோநாராயணா

## 10. நாளெல்லாம் பாடுவோம்

1 நாராயண நாராயண நாராயண ஓம்
நாராயண நாராயண நாராயண ஓம்

2 நாவினிக்க மனமினிக்க நாமினிக்க நாடினிக்க
நாளெலாம் மறந்திருந்து பாடுவோம்
நாதயோகதேகமாகி நாதநாதவென்று
நாகராஜனைப் பணிந்து பாடுவோம்.

3 பரிணமித்த பிரணவத்தின் ஒலிஎழுந்து பமபமக்கும்
பாஞ்சஜன்னியத்தை இன்று பாடுவோம்
தபனன் ஆயிரங்கள் ஏகரேகையான கரஸகஸ்ர
சக்ரமூர்த்தியைப் புகழ்ந்து பாடுவோம்

4 கனககோடி சிகரமேரு குமிழெனக் கனத்துநின்ற
கதையினைப் பணிந்து நின்று பாடுவோம்
கரஸரோஜம் மலருகின்ற ஜலஸரோஜ மாண்பு சார்ங்க
கட்க சக்தியும் தெரிந்து பாடுவோம்

5 கடுவிஷம் தணிக்கும் கண்கள் கனல்பறக்கக் கை குவிக்கும்
கருடமூர்த்தியைப் பணிந்து பாடுவோம்
ஜகமெலாம் அடக்கிவைக்கும் உதரஉந்தி முளரிபூத்த
சதுமுகன் பதம்பணிந்து பாடுவோம்

6 தேவர்போற்ற முனிவர்போற்ற யோகமாயையிற் கலந்த
தேவதேவனைப் பணிந்து பாடுவோம்
திருமடந்தை நிலமடந்தை இருமருங்கு மகிழ்வந்த
ஸ்ரீநிவாசனைப் பணிந்து பாடுவோம்

## 11. நாராயணா ரங்கநாதா

1 நாராயணா ரங்கநாதா—இந்த
ஞாலமனைத்தும் அளந்த பொற்பாதா.

2 வானப் பெருங்குடைக்கீழே—வாழும்
மாநில மாந்தர் வணங்கித் துதிக்க
ஞானப்பெருஞ் சுடர்வீசும் —அருள்
நாயகனுக்கி எனக்கருள் செய்வாய்

3 உலகம் எலாம் அருள்லீலை—இந்த
உண்மையைக் காண்பவர் உன்னையுங்காண்பார்
வலமுற்றுனைத் தொழும்வேளை—கொடும்
வன்மனக் காலனுக் கிங்கென்ன வேலை?

4 கங்கைப் பெருக்கினைப்போலே—எந்தன்
காலமெலாம் கவிபாடிட வேண்டும்
பொங்கும் இமாசலம் போலே—பரி
பூரணயோக கம்பீரமும் வேண்டும்

5 தூய செழுஞ்சுடர்த் தேவா—எம்மைத்
தூண்டி நடத்துக ஞானம்அளித்தே
ஆயிரம் ஆயிரம் தோற்றம்—காட்டி
ஆடுகின்றாய் இங்கெமக்குமுன் வாவா

6 கற்பனை என்பது பொய்யே—அருட்
காக்ஷி என்றே இதைக் காண்பது மெய்யே
அற்புதத் தன்மைகளெல்லாம்—உந்தன்
ஆற்றலிலே அணுத் தோற்றமும் அன்றோ

7 வெற்றி விழிச்சுடர் வீரம்—எது
மேவினும் சாந்தம் மிகுந்த உதாரம்
பற்றறியா மனப்பண்பு—உன்னைப்
பற்றி இழுத்திடும் பக்தியும் வேண்டும்

8 தங்கத் தனிக்கதிர் போலே—தவ
சக்தி அருட் கனலேறிட வேண்டும்
சிங்கக்குரல் கேட்கவேண்டும்—ஹரி
சிந்தையிலே ஜீவன் முக்தியும்வேண்டும்

## 12. ஜீவக்கிளியே.

1 நாராயணு ரங்கநாதா—ஹரே
நாராயணு ரங்கநாதா—என்று
சொல்லிப்பழகு ஜீவக்கிளியே—நித்தம்
சொல்லிப்பழகு ஜீவக்கிளியே

2 கோடிவரங்கொடுக்கும் நாமம்—ஞான
கோபுரம் போலிருக்கும் நாமம்
பாடப் பரிந்து வரும் நாமம்—அது
பரிமள ரங்கநாதநாமம்

3 பழகிச் சிறைவிடுக்கும் போது—யமப்
பருந்தின் பயம் தவிர்க்கும் நாமம்
அழியாத வீடு தரும் நாமம்—எங்கள்
அழகன் ஸ்ரீரங்கநாத நாமம்

4 நாகசயனம் செய்த நாமம்—மகா
ஞானிகள் கண்ட ஹரிநாமம்
ஆகம் நிறம் கருத்த நாமம்—அது
ஆதி ஸ்ரீரங்கநாத நாமம்

5 புன்னகை பூத்துநிற்கும் நாமம்—அது
புவனம் முழுதும் உண்டநாமம்
முன்னொடு பின்னுமான நாமம்—மன
மோகன ரங்கநாத நாமம்

6 நாமமுரைக்கும் தினம் நமதாம்—சொல்லா
நாளுக்குரியவனும் நமனும்
க்ஷேமம் அனைத்தும் தரும்நாமம்—எங்கள்
ஸ்ரீதர ரங்கநாதநாமம்

## 13. மதுராக்ஷர மாதவன்

1 மதுரமதுர மதுராக்ஷர மாதவ மாயா ரமணவிபோ—
ஹரே ஹரே
மாலாபரணவிபோ—ப்ரபோவன
மாலாபரணவிபோ
பரமபுருஷ பரந்தாம தயாமய பன்னக சயனப்ரபோ—
ஹரே ஹரே
ஜெய ஜெகந்நாதநமோ

2 பக்தரக்ஷகனுமாய் பக்தவத்ஸலனுமாய்
பக்தபராதீன பரமாத்ம ரூபனவன்
பாதம் நினைத்திடுவோம்—மெய்யன்பர்பாத
தூளி அணிந்திடுவோம்

3 வேதவேதாந்தங்கள் வருந்திஅழைத்தும்காணான்
மேவு மெய்யன்பர் இடும் ஏவல் விரும்பிச் செய்வான்
பாதம் நினைத்திடுவோம்—உத்தமர்பாத
தூளி அணிந்திடுவோம்

4 மலர்மகள் கொஞ்சக்கொஞ்சி மகிழ்ந்து வைகுந்தம்
வாழ்வான்
வணங்கும் ஓரேழைக்காக மனங்களித்தேதும்
செய்வான்
பாதம் நினைத்திடுவோம்—மெய்யன்பர்பாத
தூளி அணிந்திடுவோம்

5 நாராயணா எனும் நாமம் நினைந்தழைத்தால்
ஓராயிரம் மலர் பொழிந்த தென்றே உவப்பான்
நாம ஜெபம் புரிவோம்—மெய்யன்பருடன்
நாமும் நடம் புரிவோம்.

6 சங்குசக்கிரம் தாங்கும் சாமள மூர்த்தியவன்
எங்கள்குலத்தை எல்லாம் ஈடேற்றும் ஈசனவன்
பாதம்நினைந்திடுவோம்—எல்லோரையும்
நாடி வணங்கிடுவோம்.

## 14. ஜெயபகவான்

1 பகவன் நாமமே பரம பதம்—அதைப்
பாடப்பாட வரும் பரமஸுகம்

2 அமுதநாராயண அனந்த நாராயண
ஆதிநாராயண ஜெயபகவான்—ஹரே
ஆத்மநாராயண ஜெயபகவான்

3 ஏகநாராயண யோகநாராயண
நாதநாராயண ஜெயபகவான்—ஹரே
நாமநாராயண ஜெயபகவான்

4 கனகநாராயண கலசநாராயண
கமலநாராயண ஜெயபகவான்—ஹரே
கபிலநாராயண ஜெயபகவான்

5 ஸத்யநாராயண ஸகலநாராயண
ஸகஸ்ரநாராயண ஜெயபகவான்—ஹரே
ஸாங்க்யநாராயண ஜெயபகவான்

6 விமலநாராயண விஜயநாராயண
விச்வநாராயண ஜெயபகவான்—ஹரே
வீரநாராயண ஜெயபகவான்

7 ஸூர்யநாராயண ஜோதிநாராயண
ஸூக்ஷ்மநாராயண ஜெயபகவான்—ஹரே
ஸ்தூலநாராயண ஜெயபகவான்

8 பதரிநாராயண பாலநாராயண
வேதநாராயண ஜெயபகவான்—ஹரே
யக்ஞநாராயண ஜெயபகவான்

9 நித்யநாராயண நிகிலநாராயண
நீலநாராயண ஜெயபகவான்—ஹரே
நடனநாராயண ஜெயபகவான்

10 புவனநாராயண புனிதநாராயண
புண்யநாராயண ஜெயபகவான்—ஹரே
பூர்ணநாராயண ஜெயபகவான்

11 லளிதநாராயண ராஜநாராயண
லக்ஷ்மிநாராயண ஜெயபகவான்—ஹரே
வரதநாராயண ஜெயபகவான்

12 சிவநாராயண ஜீவநாராயண
திவ்யநாராயண ஜெயபகவான்—ஹரே
தீர்த்தநாராயண ஜெயபகவான்

13 ப்ரபுநாராயண ப்ரக்ருதிநாராயண
ப்ரளயநாராயண ஜெயபகவான்—ஹரே
ப்ரணவநாராயண ஜெயபகவான்

14 விபவநாராயண விபுலநாராயண
விஷ்ணுநாராயண ஜெயபகவான்
வேணுநாராயண ஜெயபகவான்

15 அச்வத்தநாராயண அலங்காரநாராயண
அர்க்யநாராயண ஜெயபகவான்—ஹரே
அகஸ்த்யநாராயண ஜெயபகவான்

16 நர நாராயண நவ நாராயண
ஹரிநாராயண ஜெயபகவான்—ஹரே
மகுடநாராயண ஜெயபகவான்

17 க்ஷீரநாராயண தேவநாராயண
ஹரிநாராயண ஜெயபகவான்—ஹரே
ஸ்ரீநாராயண ஜெயபகவான்

18 ப்ரணயநாராயண ப்ரஸன்னநாராயண
ப்ராணநாராயண ஜெயபகவான்—ஹரே
ஹ்ருதயநாராயண ஜெயபகவான்

## 15. நாராயண ப்ரம்மம்.

1 அதுவேஹரிநாராயணம் அதுப்ரம்ம ரகஸ்யம்
நாராயண நாராயண நாராயண ஸத்யம்

2 ஒன்றெனநிற்கும் பல என ஆகும் உலகாகும்
இன்றுடுநேற்றாய் நாளையுமாகும் இயலாகும்
நன்றுடுதீதாய் நானாவிதமாய் நடுவாகும்
அன்றெனவும் சொல ஆமெனவும்சொல
அமைவாகும்

3 மூலமுமாகும் முழுவடிவாகும் முடிவாகும்
ஞாலசராசர மாயாநாடக மயமாகும்
காலமுமாகும் காரண காரியகதியாகும்
தூலமுமாகும் ஸூக்ஷ்மமுமாகும் துணையாகும்

4 நாமெழுமுன்னே நானிலமெங்கும் நாள்தோறும்
பூமலராகிப்புன்னகை புரியும் புவிவானம்
ஆமிவைநாமறியாத விநோதம் பலகோடி
தாமளவின்றி நடத்தி அணைத்தும் தானாகும்

5 அலையாய்க் கடலாய்க் கதிராய் ஒளியாய் அசையாத
மலையாய் வனமாய் மழையாய்ப் பயிராய் உயிராகித்

தலைகாலொடு தாமுள தாய்த் தனிமானுடமாகி
நிலையாய் நிலையற்றவையாய் வெயிலாய் நிழலாகும்

6 வாசகவாச்சிய வாக்கொடு பொருளாய்ப் புலனாகும்
ஆசகலத்துவிதாத்ம விசாரத்தமைவாகும்
பேசய மாத்மாபிரமமெனும் சொல்பெரிதாகும்
மாசகல்வேத விளக்கமுமாகும் வழியாகும்

7 எப்பொருள் நின்றிவை வந்தனவோ எதில்
மறைவாமோ
எப்பொருள் அன்னிய மற்றுளதோ எதுதானமோ
எப்பொருள் ஏகமகாமயமாய் இவைஏற்றுளதோ
அப்பொருளேபொருள் அறிவதனைத்தும் அதுதானே

8 எப்பொருள் இன்றேல் எனல் ஏனமோ எதுமின்றி
எப்பொருள் உளதோ இப்பொருள் அப்பொருள்
என்னுமல்
எப்பொருளைப் பொருளென்றவர் அதுவாய்
இசைவாரோ
அப்பொருளே மெய்ப்பொருள் எப்பொருளும்
அதுதானே

## 16. மனமெனும் வயல்

1 ஹரி நாராயண ஹரி நாராயண
ஸ்ரீஹரி ஜெயஹரி ப்ரபுநாராயண

2 மனமெனும் வயல் வினை வெயிலெரிமிகலால்
மறுகிவரண்டு பிளந்து கரம்பாய்
கனமுற இறுகியும் கவல்செடி கடுமுள்
கசடுவிளைந்து வளர்ந்தது கண்பார்
ஹரிஹரி இதுபொழு தருள்மழை பொழியின்
அழலல் அகன்று குளிர்ந்து தழைந்து
பெருகிய சுகமிகும் அமைதி பிறந்து
பெருமை நிறைந்து படர்ந்து துலங்கும்
பசுமை செறிந்து நலங்கள் குலுங்கும்

3 பரமபதப்புரி எய்திட வாழ்க்கைப்
பாதையிலே அடிவைத்து நடந்து
திரமொடுபோம் பொழுதிருள் வினைமருளும்.
செய்தவைபேய்களினுடன்வரல் அறிவாய்
ஹரிஹரி தருணமிதருள் ஒளிதருவாய்
தருமமொடுண்மையின் நண்பரும் அருள்வாய்
கருணை இதயபுரி வளமையும் காண்பேன்
கனகசிகர பரமாத்ம நிவாசம்
கலந்தபேரின்பநிலை ஞானப்ரகாசம்

4 வளருடல்மனைபுக விழைவு கொளாசை
வஞ்சன் என் உறுதி மயங்கிருள் நேரம்
இளமையின் ஐவரை எளிதில்மயக்கி
இதயம் நுழைந்தபின் அறிவை அணைத்து
மணிமனப்பேழை திறந்திடவந்தான்
மாதவ நினதருள் வாளின்மடிந்தான்
அணிபெறும் எனதுளம் நினதருள் நிலையம்
அனவரதமும் எனைத் தழுவிய வளையம்

## 17. அலையும் கடலில்

1 அலையும் கடலில் அமிழும் பொழுதில்
அபயம் அளிக்கும் அருணமணியே
நினது நினைவால் உருகுமெனை நீ
விரைவில் அணைவாய் நிலவின் ஒளியே

2 உடலில் உயிர் நீ உணர்வின் உரு நீ
உரகசயனு உதவ வருவாய்
கருணை இலையோ கதறும் எளியேன்
கவலைசிறிதோ புவநபதியே

3 புதுமை ஒளியும் புலமை அறிவும்
பொலிவுமலரும் பொழிய வருவாய்
எதிலும் இசையாய் இனியபயனாய்
இலகும் அழகா இனிது வருவாய்

4 கருவின் விழலும் வய்து மிகவாழ்
கடையின் முடிவாய் விடலும் முறையோ
பெருமை இதுவோ பெரிய பொருளோ
அருள வருவாய் கருணை நிதியே

5 உனது பொருள்நான் உலகமயலால்
உலைவுபடவோ அவலம் உறவோ
எனது பதிநீ கமல நயனு
இருவரெனல்போய் ஒருமை உறுவோம்.

## 18. நாதா ஸ்ரீ வைகுண்ட வாஸா

1 நாதா ஸ்ரீவைகுண்டவாஸா — ஹரி
நாம நாராயணப்ரகாசா — நேசா — நாதா —
மீதானவானுதி ஏதேதும் மாறாமல்
மோதாமல் நேராக நீடாளும் ஆதார — நாதா —

2 நாடாமல் நயனமவநெறியி லோடாமல்
சலநமவலமிக வாடாமல் மிக்கதுக்கமொடு சோராமல்
அங்குமிங்கும் நிலைதேடாமல் இன்பதுன்ப வெறி
யாடாமல்
வஞ்சர் நஞ்சமொழி துஞ்சி எஞ்ச மதிகுன்றி என்றும்
மனநோகாமல்
வினைக்குமனையென முளைக்குமிடருடனிழுக்க
விதிதொட மாளாமல்
விட்ட விருப்பு வெறுப்பு மறுப்பு விளக்க மலைத்தழி
வாகாமல்
கவலைவறுமைபல பிணிகள் பிரிவு நிதமுறுகி
மறுகவுடல் தேயாமல்
விரவு வீணரொடுகூடாமல்
பரவு முலகியலி லுனது கருணை யநுபவமு முதிர
முதிரறிவு பெருகியெது
வரினுமிரு சரணமுளரி முனிவரரினிதயகமல மலர்பிரம
பரமநிதி

மறையினடி முடியினடு வின் மதுரமது அமுதகளப
பரிமளமு நினையநினை
இரவுபகலுமெது பொழுதுமனவரதம் அழுது
தொழுது பலபடியும் வசமழிய
விழிகள் சொருக உயிருருக அருகிலினி வருக
வருக துணை தருக தருக என
வசனமொழி குழறவந்து கூவியும்
மகரமுகுளமலர் நன்று தூவியும்
துதிகளதிக விதம் நின்று பாடியும்
ஏதுவிதம் பணிவேன்என ஏங்கிடும்
ஏழையை ஆண்டருள் ஏகவியாபக — நாதாஸ்ரீ

## 19. நாராயணு ஹரி நாராயணு.

1 நாராயணு ஹரி நாராயணு ஹரி
நாராயணு ஹரி நாராயணு
நாராயணு ஹரி நாராயணு ஹரி
நாராயணு ஹரி நாராயணு

2 வேதத்திலுள்ளது நாராயணு — அதன்
மேலும் விரிந்தது நாராயணு
ஓதற்கெளியது நாராயணு — நல்லோர்
உள்ளம் விடாதது நாராயணு

3 பூவில்மணப்பது நாராயணு — பூணும்
பூண்களில் பொன்மையும் நாராயணு
கூவும் குயிற்குரல் நாராயணு — உடற்
கோயிலிலே உயிர் நாராயணு

4 நான்முகன் வாக்கிலும் நாராயணு — தவ
ஞானிகள் வாக்கிலும் நாராயணு
வான்முதல் ஐந்திலும் நாராயணு — சக்ர
வாளத்தின் அப்புறம் நாராயணு

5 வீணையில் நாதமும் நாராயணா — அவன்
வேய்ங்குழல் ஓசையும் நாராயணா
ஆணவத்தோன் பின் பழைப்பினும் நாணின்றி
அன்புடன் செல்வது நாராயணா

6 முத்தொகையாகிய கன்மங்கள் தீர்ப்பது
மோக்ஷம் அளிப்பது நாராயணா
நித்திய வஸ்துவும் நாராயணா — வான
நீல நிறத்தது நாராயணா

7 மாமகள் கொஞ்சும் மணாளனவன் — புவி
மங்கை மகிழ்ந்த குணாளனவன்
காமனைத் தந்தருள் தந்தையவன் — மலர்க்
கண்ணனவன் மணி வண்ணனவன்

8 வானவர் வாக்கிலும் நாராயணா — அன்று
மந்தரம் ஏற்றதும் நாராயணா
மோனிகள் காண்பது நாராயணா — மன
மோகினியானது நாராயணா

9 தெரிசனமாயையில் தானவர் மாழ்கிடத்
தேவரைக் காத்தது நாராயணா
ஹரிஹரபுத்திரன் ஆனந்தன் அற்புதன்
அய்யப்பன் ஆனதும் நாராயணா

செந்தமிழ்ப் பாடல் விரும்பி எந்நாளுமென்
சிந்தையில் வாழ்வது நாராயணா
மந்திரப் பாடல்கள் சொல்பவர் வீட்டிலும்
வாழவருவது நாராயணா

11 பாடுமின் பாடுமின் பாருலகீர் — பரி
பாவனப் பாடல்கள் பாடுமினோ
நாடு விளங்கிட வீடு விளங்கிட
நாராயணா வென்று பாடுமினோ

12 மண்ணகம் உண்டசெவ்வாயனவன் — மன
மாயை கடந்தவர் நேயனவன்
கண்ணெனவே என்னைக் காப்பவனும் — எந்தக்
காலமும் என்மொழி கேட்பவனும்

## 20. சிந்தனை.

1 உள்ளப்பொழில் மலரும் — அநுபவ
உண்மை மலர்களெல்லாம்
கொள்ளைப் பெருங்காலக் — காற்றில்
குன்றிக் குலைந்திடுமோ

2 உள்ளத்திலே உதிக்கும் — உண்மைகளை
ஓலையிலே வடித்தேன் — கால
வெள்ளப் பெருக்கினிலே — அனைத்தும்
வீணாய் அழிந்திடுமோ

3 சிந்தை விளைந்தபொருள் — அள்ளிஅள்ளிச்
சேர்த்துக்குவித்து வைத்தேன் — மெல்ல
வந்திடும் காலக்கள்வன் — கவர்ந்து
வாரி மறைவானோ

4 வித்தை எலாம் உணர்ந்து — வாழ்வில்ஞான
வெற்றி அடைந்தபின்பு — நான்
வைத்த பெருநிதியை — அடைந்தவர்
மண்ணில் புதைப்பாரோ

5 ஒன்றையும் நானறியேன் — ஹரே உன
துள்ளக்கருணையினால் — எனை
என்றும் நடத்திடுவாய் — அடைக்கலம்
எங்கள் பெருமானே

6 புன்கவியே எனினும் — அதில் நீ
போற்றும் பொருள் அலவோ

என்கவி மாலையிதோ — அணிவாய்
என்றும் இருப்பவனே

7 பாடலில் நீ கலந்தால் — காலச்சுழல்
பற்றும் பயமில்லையே — இந்த
நாடு நலம்பெறவே — நாராயண
நாயகனே வருவாய்

8 நாராயணா ஹரிஓம் — ஜெயஜெய
நாராயணா ஹரிஓம்
நானும் என்நாளும் எந்நாளும் ஒன்றாகிட
நல்லவரம் தருவாய்

## 21. நாராயணாய நமவே

1. உலக மொருதுகளாக உததியொரு துளியாக
ஒளி சிறிய பொறியுமாக
உயர்வாயு வெளிவிடும் உயிர்ப்பாக வானமோ
ஒரு விரல் துளையுமாக
நிலவயனும் அரனும் நிலையிலராக அமரர்வெறும்
நிழலாக வெளியாகிடும்
நினது பதமலரணியு மகரந்த தூளியருள்
நித்தமும் நினைந்து வருவேன்
இலகுமெதன் எணமிலாமறைகள் வனமுறைகளோ
இசைவிரதம் உடலினழிவோ
எழுதீர்த்தமாடலும் களிறுபுனலாடலோ
எனதிதய மணியுமெதுவோ
நலமலியுமது பரமஸுக மலியுமது ஹரியின்
நளின புண்ணியபாதமே
நாளும் எந்நாவில் விளையாடு மொரு நாமமோ
நாராயணாய நமவே

2 உலகநிலையாகி உளதுமிலதாகி
உரு அருவமாகி இருகூறாய்

உருவிலருவாகி அருவிலுருவாகி
உயிரிலுயிராகி ஒளியாகி
நிலவு கதிராகி நெடிது குறிதாகி
நினையுமதுவாகி நினைவாகி
நினைவுமலதாகி நிகளமிலதாகி
நிகமமுடிவாகி நிறைவாகி
அலகில் விளையாடல் புரியும் அதிரூப
அரவின் அணைமீது துயில்வோனே
அருகில் அலைமாது நளின தளபாதம்
வருடநகையாடி மகிழ்வோனே
சலசலெனவீழும் அருவி எனநாளும்
மதுரகவிபாட அருள்வாயே
சதுரபரிவார பரமபத ராஜ
சரணம் எனையாள வருவாயே

## 22. நல்லவழி.

1 நல்லவழி சொல்லுவேன் — மனமே
நாடித் தெரிந்து கொள்வாய்
மெல்ல விழித்தெழுந்தால் — மனமே
வெற்றியடைந்திடுவாய்

2 நாடக வாழ்க்கையிலே — மனமே
நாளும் சலிப்படைந்தோம்
வேடம் கலைத்திடுவாய் — மனமே
மெய்யொளி கண்டிடுவோம்

3 வாழ்ந்தவர் தாழ்வதையும் — காலநிலை
மாறிச் சுழல்வதையும்
சூழ்ந்தவர் போவதையும் — கண்டுகண்டு
துன்பம் அடைந்துவிட்டாய்

4 ஆயினும் அஞ்சாதே — நாராயணன்
ஆதிபரம்பொருளாம்

தாயினும் அன்புடையான் — அருளால்
தாங்கிநலம் தருவான்

5 சஞ்சலம் வந்ததென்றால் — ஸாதுசங்க
சன்னிதி சென்றிடுவாய்
நஞ்சம் அகன்றிடவே — நாராயண
நாமம் ஜெபித்திடுவாய்

6 வாழ்க்கைப் பெருங்கடலில் — அலைகள்
வாய்த்த வியப்பும் உண்டோ
காக்கவரும் பெருமான் — நாராயணன்
கண்கண்ட தெய்வமவன்

7 இன்பதுன்பங்களெல்லாம் — நாராயணன்
எண்ணமென்றே இருப்பாய் — அந்த
அன்பின் உணர்ச்சி கொண்டால் — மனமே
ஆனந்தம் வேறில்லையே

8 ஆற்றிய புண்ணியங்கள் — அவன் தாளில்
அர்ப்பணம் செய்திடுவாய்
ஏற்றநலம் தெரிந்தே — மனமே
இன்பம் அடைந்திடுவாய்

9 அன்பர் திருக்கூட்டம் — எந்நேரமும்
அச்சுதன் நாம ரஸம்
இன்ப நினைவிருந்தால் — மனமே
என்றும் குறைவில்லையே

## 23. அந்தியம் என்முன் வந்தருள்வாயே.

1 நாராயணா ஸ்ரீமந் நாராயணா பத்ரி நாராயணா
ஹரி நாராயணா
நாராயணா ஸத்ய நாராயணா ஸூர்ய நாராயணா
லக்ஷ்மி நாராயணா

2 நொந்துடலம் கிழமாகித் தளர்ந்தபின்
நோயில் நடுங்கிடும்போது — ஜீவ
நாடிகள் நைந்திடும்போது — மனம்
எண்ணிடுமோ தெரியாது — இன்று
சிந்தை கசிந்துனைக் கூவுகின்றேன் அருள்
செய்திடுவாய் ஹரி நாராயணா

3 நீடுகபம் கோழை ஈழை நெருக்கி என்
நெஞ்சை அடைத்திடும்போது — விக்கி
நாவும் குழறியபோது — மனம்
எண்ணிடுமோ தெரியாது — நான்
அன்றுனைக் கூவிட இன்றழைத்தேன் எனை
ஆண்டருள்வாய் ஹரி நாராயணா

4 ஐம்பொறியும் கரணங்களும வாயுவும்
ஆடி அடங்கிடும்போது — எந்தன்
ஆவி பிரிந்திடும்போது — மனம்
எண்ணிடுமோ தெரியாது — இன்று
நம்பி உனைத்தொழுதே அழைத்தேன் ஜகன்
நாயகனே ஹரி நாராயணா

5 உற்றவர் பெற்றவர் மற்றவர் சுற்றமும்
ஓவென்று நின்றழும்போது — உயிர்
ஓசைகள் ஓய்ந்திடும்போது — மனம்
எண்ணிடுமோ தெரியாது — இன்று
பற்றி உனைப்பணிந்தே அழைத்தேன் ஆபத்
பாந்தவனே ஹரி நாராயணா

6 என்பொருள் என்மனை என்றதெல்லாம் இனி
இல்லை என்றாகிடும்போது — மனம்
எண்ணிடுமோ தெரியாது — நீ
அன்றுவரும் பொருட்டின்றழைத்தேன் அருள்
அச்சுதனே ஹரி நாராயணா

7 வந்தெம தூதர்வளைந்து பிடித்தெனை
வாவென்றிழுத்திடும்போது — மனம்
எண்ணிடுமோ தெரியாது — அந்த

அந்தியம்நீவர இன்றழைத்தேன் ஸச்சி
தானந்தனே ஹரி நாராயணு

## 24 மஹாலக்ஷ்மியை அழைத்தல்.

1 தீபஜோதியாய் வருவாய்நீ தீபஜோதியாய் வருவாய்
திருமகளே பொருள் தருமகளேநீ தீபஜோதியாய்
வருவாய்

2 உனதருள் உளதேல் உலகாம் — இன்றேல்
உலகவாழ்வு கொடும் நரகாம்
தனதானிய ஸௌபாக்கியம் தருவாய் — தீபஜோதி

3 பாற்கடல் உதித்த பொற்கொடியே — உந்தன்
பார்வை பெற்றவர்க்கெதும் எளிதாம்
சேர்த்தபின் பயனுறும் செல்வமும் தருவாய் — தீப

4 வீரத்திருமகளின் நோக்கம் — எல்லா
வெற்றி அளிக்கும் மன ஊக்கம்
சீரும் சிறப்புமனத்திறமையும் தருவாய் — தீப

5 செந்தாமரை வளர் ஒளியே — ஐயன்
திருமார்பினுள மணியே
எந்தாய் நினதருள் வாழ்கவாழ்கநீ — தீப

6 கமல நயனமிகும் கருணை — எந்தன்
கவிகள் பாடுமிடம் பொழிவாய்
வமிசமுழுதுமவருக்குள் வரம்தருவாய் — தீப

7 தோகை நினதருளின் துணையால் — நான்
தொட்டதனைத்தும் பயனளிக்கும்
யோகபோக சுகவாழ்க்கையும் தருவாய் — தீப

## 25 பராசக்தி.

1 அகணிததாரா கணங்களின் நடுவே
ஆதிபராசக்தி ஆடுகின்ருள்

ஸகல சராசரத்தும் தங்கச்சிலம் பொலிக்க
ஜகதீச்வரியவள் ஆடுகின்றுள்

2 அயனெனவருவாள் அனைத்தையும் படைப்பாள்
ஹரியென அளிப்பாள் அரனென அழிப்பாள்
அழிவிலிருந்தும் ஜீவன்பிறந்திடச் செய்பவளாம்
அகிலாண்டேச்வரி ஆடுகின்றுள்

3 அகிலமுழுதும் உள்ள ஆருயிரினங்களும்
ஆழப்பெருங்கடலில் வாழுயிரினங்களும்
அன்றன்றுணவுகொள்ள அத்தனைக்கும் தந்தருளி
அன்னபூர்ணேச்வரி ஆடுகின்றுள்

4 கனக கமலந்தன்னில் கனிந்தசிவப்பொருளைக்
கலந்து பேரின்பங்காட்டும் கனல் வடிவானவளாம்
நானற்ற நல்லோர்க்கெல்லாம் நான் இதோ
என்றுதோன்றும்
ஞானபரமேச்வரி ஆடுகின்றுள்

5 இதயவீணை எழும் இன்னிசையவளே
இருளை அகற்றும்தீப ஜோதியும் அவளே
நாற்பத்துமூன்றுகோண நாதமணி மண்டபத்தில்
ஸ்ரீலலிதேச்வரி ஆடுகின்றுள்

6 அழைக்குமுன் வருவாள் அடைக்கலம் அளிப்பாள்
அன்பினுக்கட்படுவாள் அனந்த கல்யாணியவள்
அருட்கவிமாலைபாடும் அகத்தியன் அகத்திலே
அமுதசந்த்ரேச்வரி ஆடுகின்றுள்
ஆனந்தநாடகம் ஆடுகின்றுள் — அவள்
அகஸ்த்ய ஸித்தேச்வரி ஆடுகின்றுள்

## 26 யுகாந்த நடனம்.

1 கோரமாம் இருள் கிழிந்தெழுந்த பல
கோடிகோடி மின்னல்கூட்டம் — அது

காலரூபிணி த்ரிசூலி நீலிரண
காளிஆடும் வெறிஆட்டம்

2 அண்டரண்டமுழுதும் பிளந்துதிர
ஆரவாரமிகு சீற்றம் — அது
சண்டமுண்டரை விழுங்கிநின்ற ரண
சண்டி தோன்றுமொரு தோற்றம்

3 அஷ்டதிக்கும் நிலைகெட்டு விட்டுலைய
அலையவீசு மணல் நாட்டம் — அது
தொட்டதொட்டதிசை சுட்டெரித்த ரண
துர்க்கை ஆடும் வெறியாட்டம்

## 27 ஸ்ரீசக்ர நாயகி.

1 ஸ்ரீசக்ரராஜ ஸிம்மாஸனேச்வரி
ஸ்ரீலலிதாம்பிகையே புவனேச்வரி — ஸ்ரீ

2 ஆகம வேத கலாமய ரூபிணி
அகில சராசர ஜனனி நாராயணி
நாக கங்கண நடராஜ மனோகரி
ஞான வித்யேச்வரி ராஜராஜேச்வரி

3 பலவிதமாயுனைப் பாடவும் ஆடவும்
பாடிக்கொண்டாடும் அன்பர் பதமலர் சூடவும்
உலகமுழுதும் எனதகமுறக் காணவும்
ஒருநிலை தருவாய் காஞ்சிகாமேச்வரி

4 உழன்றுதிரிந்த என்னை உத்தமனாக்கிவைத்தாய்
உயரிய பெரியோருடன் ஒன்றிடக்கூட்டிவைத்தாய்
நிழலெனத் தொடர்ந்த முன்னூழ்க்கொடுமையை
நீங்கச் செய்தாய்
நித்யகல்யாணி பவானி பத்மேச்வரி

5 துன்பப்புடத்திலிட்டுத் தூயவனாக்கி வைத்தாய்
தொடர்ந்தமுன் மாயம் நீக்கி பிறந்தபயனைத் தந்தாய்

அன்பைப்புகட்டி உந்தன் ஆடலைக் காணச்செய்தாய்
அடைக்கலம்நீயே அம்மா அகிலாண்டேச்வரி

## 28 அம்மா.

1 அருணகிரண மணிகோடிகள் ஒளிசெய
அமுத மதுரமலர் அரியணை மீதினில்
அகிலம் முழுதும் கொலுவீற்றிருந்தருள் தரும்
ஆதிதேவியே அம்மா — நான்
அடிமை அலவோ அம்மா — எனை
ஆள வா வா அம்மா

2 கருணையின் அருளை என்னென்பேன் — இந்தக்
கடையவனுக்கும் அருள்செய்தாய்
அருகிலிருந்து துணை தரும் மலைமகளே — ஆதி

3 துன்பம் மிகுந்து வந்தபோதும் — மனம்
சோர்ந்து மதிமயங்க மாட்டேன்
அன்பர் துணையும் நினதருளும் இங்கிலையோ — ஆதி

4 தகிக்கும் கொடுமைபல தாங்கி — நான்
தனித்துப்புரிந்த தவப்பெருமை
தரணிமுழுதுமொருகாலம் நன்கறியும் — ஆதி

5 சக்திவிளங்கும் அருள்வாக்கும் — மகா
சாந்தி விளங்கும் அருள் நோக்கும்
பக்திபுரியும் அருள்வாழ்க்கையும் தருவாய் — ஆதி

## 29 மலைதொறும் விளங்கும் மாணிக்க மைந்தன்.

1 பச்சைமயில் வாகனனைப் பாடிடுவாய் மனமே
பக்தரெலாம் ஆடிவரப் பாடிடுவாய் மனமே
இச்சைஎலாம் பலித்ததென்று பாடிடுவாய் மனமே
இன்பமிதே இன்பமென்று பாடிடுவாய் மனமே

2 திருப்பரங்கிரி வாழுமெங்கள் செல்வனருளாலே
சித்தஜயம் உற்றதென்று பாடிடுவாய் மனமே

திருச்செந்தூர் விளங்குகின்ற தேவனருளாலே
ஜீவன் சிவமானதென்று பாடிடுவாய் மனமே

3 ஆவினன்குடி அலங்கரிக்கும் ஐயனருளாலே
அருள்நிலை கை வந்ததென்று பாடிடுவாய் மனமே
சுவாமிமலை துலங்குகின்ற தூயனருளாலே
ஜோதிமயமானதென்று பாடிடுவாய் மனமே

4 கோலமிகும் திருத்தணிகைக் குமரனருளாலே
குறைகளெலாம் தீர்ந்ததென்று பாடிடுவாய்
மனமே
சோலைமலை வடிவழகன் முருகனருளாலே
சுத்தசக்தி தோன்றுமென்று பாடிடுவாய் மனமே

5 பாடிடுவாய் மனமே — குஹன்புகழ்
பாடிடுவாய் மனமே — சிறு
பாலனுமான பரப்ரம்ம ஜோதியைப்
பாடிடுவாய் மனமே.

6 நீ மயிலாகி நின்றால் — நின்மீதவன்
நிர்த்தனம் செய்திடுவான்—நீ
காமியம் அற்றுவந்தால்—கந்தனின்
காட்சிகண்டின்புறலாம்

7 செய்யும் செயல்களெல்லாம்—முருகன்
சேவை என்றர்ப்பணிப்பாய்
ஐயனைக் கண்டபின்பும்—மனமே
அச்சம் பிறந்திடுமோ.

8 அன்று கைலைமண்டபத்தில் அரனின்நேத்திரங்கள்
தந்த
ஆறனப்பிழம்பு மொன்றுகூடியே

அமரர்வாழ அறமும்வாழ ஆறுமாதர் அமுதமூட்ட
அருள் மலர்ந்த சரவணத்தில் தோன்றினன்
அடியர் தம்மைக் கண்டுபேசி அவர்மொழியைக்
கேட்டுவாழ்ந்த
அறுமுகமீராறு கைகள் மேவினன்
அரியதான பிரணவத் தினுரியதன்மை யறிவுறாத
அயனை நீக்கி ஆக்கிவிளையாடினன்
குன்றையும் குவிந்தசூர்குலத் தையும்பிளந்து
கொன்று
கொண்டலிற் புகுந்துவந்த வேலினன்
கோயிலெங்கு மெங்குமன்பர் கூடவேண்டும்
வேண்டுமென்று
கொக்கரித் தெழுந்துகூவும் கோழியான்
குருவுரைத்த பிரணவத்தின் உருவமைத்திலங்குகின்ற
கோலநீல வண்ணவன்ன மயிலினன்
குறுமுனிக் கிசைந்துவந்து தமிழ்சுவைத்து மன
மகிழ்ந்து
குன்றமெல்லாம் கோயில்கொண்ட வாழ்வினன்

9 சீருடன் சிறப்பும்பொருட் பேறுபதினாறும் தொழிற்
செல்வமும் தினம்செழிக்க வாழலாம்
தேகபலமென்றும் திடமாகிமிகு போகசுக
சீவிதமுகந்துநலம் சேரலாம்
செம்மையும் தெளிந்தமனத் தன்மையும் பெருந்தரும
சிந்தையும் தழைந்தமைதி யாகலாம்
தேடிவைத்ததுங் கெடுத்துப் பாழ்படுத்தலன்றிப்
புகழ்
சேரவைக்கும் சந்ததிகள் மேவலாம்
பாருலகமே முழ்தொழக் காவலரும் ஏவலராய்ப்
பாதுகைசுமக்க உயர்வாகலாம்
பாசமொடு தூதர்வரிற் பேசியவர்போ யெமனைப்
பற்றிவரச் சொல்லிப் பணியேவலாம்
பாபவினை விட்டொழியப் பாக்கியப்பயன் பலிக்கப்
பண்புடன் பஜனைசெய்யும் மாந்தரே

பக்கலும் மறந்து நெஞ்சம் நெக்குருகப்பம்மி விம்மிப்
பக்தியில் நெகிழ்ந்தமிழ்ந்து பாடுவோம்.
பூரண பரப்பிரம ரூபசிவலீலை எனப்
பொய்கையிலு தித்தவனுமாயினன்
புத் தொளிவிரித்து மறையுச்சரித்த தத்துவங்கள்
பொற்சிலம்பலம்ப நிர்த்தமாடினன்
போற்றியணையேற்றி யரன்காத்து மொழிகேட்கத்
போதனைபுகன்ற கனிவாயினன் [தானே
போகமுடிவான சிவயோகவடிவாகி முனம்
பொங்கிவரும் பொன்மயிலில் ஏறினன்
காரணவுமா மலைகள்தோறும் விளையாடி அருட்
காட்சிகள் அளிக்குமியல் பாகினன்
காலவளையங் கடந்துபாடிடு மகத்தியனின்
காவியத் தமிழ்சுமந்த தோளினன்
கானகத்துக் காவல்குறக் காரிகையின் கன்னல்மொழி
காதலுக்கலைந்த மலர்த்தாளினன்
காளிகவுமாரி உமைபார்வதி சுபுத்திரனைக்
கண்குளிரக் கண்டகுகன் நாமமே.

10 சிந்தையும் தொடர்ந்தியங்கும் இந்தியங்களைந்து முந்தன்
செஞ்சரண் வணங்கும்படித் தேற்றினாய்
சீ நரம்பெலும்புடம்பில் தூயமுதம் பாயவைத்துத்
தேவனென ஞானதீபம் ஏற்றினாய்
தெத்து மொழிப்பித்துரையைத் தெய்வத்தமிழ் வாணி எனத்
தேமதுர வெள்ளமென மாற்றினாய்
சித்தர்கணநாத னெனவைத்தடிமை எப்பொழுதும்
சித்துவிளையாடிவரச் சாற்றினாய்
சந்தமும்என்றன் தமிழ்ச்சந்தம்தரும் இன்பமெனும்
சந்தனக்குழம் பிதென் றுபூசினாய்
தன்சுய சொரூபநிலைமுன்னு முதல்மூலம் தனைத்
தந்தையின் மனங் குளிரப் பேசினாய்

தற்பெருமை யுச்சியெழச் சற்பனை இருட்கரவின்
சக்கையவரற்பர்வரக் கூசிஞய்
சத்துருபயம் தவிர்க்கும் சக்தியை எடுத்துக்கடல்
முற்றிலும் நெருப்பெழும்ப வீசிஞய்
கந்தகுரு நாதவெனக் கானமகள் நாதவெனக்
கானசுகமேவுமனை தேடிஞய்
காலமற்ற மன்றிலிடக் காலெடுத்த தாண்டவனும்
கையெடுத்துத் தாளம்போட ஆடிஞய்
கைக்கனிதனைத் தமையன் பெற்றிட அரைக்
கணத்துள்
காசினியனைத்தும் சுற்றி ஓடிஞய்
கற்றறிவுபெற்ருெழுகும் கண்படைத்த புண்ணி
யர்க்கு
காட்சி தரும் ஆறுபடை வீடிஞய்
தொந்தமிக பந்தமறத் தொண்டுபுரிந்தே மறந்தால்
துங்கநெறி என்று வழிகாட்டிஞய்
துரியவள ஞானநாட்டின் அரியணை செங்கோலும்
தந்து
ஜோதி மயமானமுடி சூட்டிஞய்
சொல்லரும் யுகங்களினிச் சுற்றுகின்ற காலமெல்லாம்
தோன்றிஅடியேனு முன்னைப்பாடுவேன்
தோத்தரிக்கும் வேளைஎல்லாம் மங்கையர்மருங்கமரத்
தோகைமயிலேறிவர வேண்டுமே.

11 சங்கரி கல்யாணிஉமை தன்கரத்தெடுத்தமுதம்
தந்திடத் தணிந்து பசிநீங்கிஞய்
தங்கமணித் தொட்டிலிட்டுப் பூமகளும் நாமகளும்
தாயுடன் தாலேலோ எனத் தூங்கிஞய்
தந்தையும் குனிந்து முகத்திங்களெழில் கண்டுவக்கச்
சந்திரவெளிச்சம் கண்டு தாவிஞய்
தன்புறத்திருத்தி முன்ஞேன் அன்புடன் தவழ்ந்து
செலத்
தந்தியைச் செலுத்தலென ஏவிஞன்

கங்கையினின்றே எடுத்துக் கங்கையை
முகந்தரன்கைக்
கங்கனலிற்பெய்து விளையாடினாய்
கட்செவியைப் பற்றிமயில் உச்சிவைத்து
மூடிகத்தைக்
கணபணத்திருத்தி நகையாடினாய்
காலன் கயிறைக்கவர்ந்து காரிசெலும் காகவாகக்
கால்களைப் பிணித்திழுத்துத் தாழ்த்தினாய்
கந்த நினதன்பர்வாழும் காதவழிப் போகோமென்று
கைகுவித்திறைஞ்சத் தந்து வாழ்த்தினாய்
பங்கஜனின் நான்குமுகக் கண்கள் வியப்பால் விரியப்
பார்த்ததிசை எங்கும் நிறைவாகினாய்
பச்சைமுகில் அச்சுதன்கை வைத்தகதையாற்
கடைந்து
பாற்கடலில் வெண்ணெய் அளைந்தேகினாய்
பக்திமிக்க நாரதரும் பாரதியும் மெய்ம்மறக்கப்
பண்ணெழும்பும் வீணைநாணப் பாடினாய்
பண்டுள குண்டோதரனின் உந்திமலை என்றுசென்று
பாரநெடுந் தோளிலூஞ்சலாடினாய்
எங்கள்குல தெய்வமாகி இன்பசுக சாகரமாய்
எப்பொழுதும் என்மொழியைத் தாங்கினாய்
எக்கணத்திலும் பிரியேன் சத்தியமிதென்று சொல்லி
என்னுயிரில் என்கவியில் ஓங்கினாய்
எத்தனையுகங்கள் இனிச்சுற்றி வந்தபோதுமிந்த
ஏழையும் பிறந்துபிறந் தேத்துவேன்
ஏகலோக நாயகனே எங்கள் பங்கில் நின்றருள
ஏறுமயி லேறிவர வேண்டுமே

12 ஆறுமுகா முருகா என என்மனம்
கூவுமே — நித்தம் — கூவுமே — அவன்
அன்பரைக்கண்டு வணங்கப்பதந் தொறும்
தாவுமே — எண்ணித் — தாவுமே — அவர்
கூறும் தமிழ்க்கவி ஊற்றி வரக்களி

கொள்ளுமே—வெறி—கொள்ளுமே—தொண்டர்
கூட்டத்தில் பாடிக்கூத்தாடிக் குகா என்று
துள்ளுமே — இன்பம் — அள்ளுமே — அவன்
ஏறும்மயூரமும் சேவலும் வேலும் முன்
நிற்குமே — எதிர் — நிற்குமே — உல
கெங்கணும் நாம சங்கீர்த்தன வெள்ளம்
பெருக்குமே — உள்ளுருக்குமே — அருள்
மாறுபடாத ஸதானந்த வாழ்விது
பாருமே — எண்ணிப் — பாருமே — மலை
மங்கையின் மாணிக்க மைந்தனைப் பாடிட
வாருமே—இங்கு—வாருமே

13 சண்முககந்த ஷடாக்ஷரனே எனப்
பாடுமே — மனம் — பாடுமே — அவன்
சன்னதியேகதி என்று கிடந்து கொண்
டாடுமே — அருள் — கூடுமே — எந்தன்
எண்ணம் அனைத்தும் வளைத்திழுத் தானவன்
ஈசனும் — முருகேசனும் — பிற
கென்னையும் கொள்ளைகொண்டான் குறவள்ளியின்
நாதனும் — குரு — நாதனும்
பண்ணிழையும் தமிழ் வெள்ளத்திலே இனி
ஆழுவோம் — அன்பு — சூழுவோம் — அவன்
பக்தர்பதத்துணை பற்றிப் பஜனையில்
வாழுவோம் — என்றும் — வாழுவோம்
மண்ணுலகத் தழியாப்பெரும் வாழ்விது
பாருமே — எண்ணிப் — பாருமே — மலை
மங்கையின் மாணிக்க மைந்தனைப் பாடிட
வாருமே — இங்கு — வாருமே.

14 அண்டம் அனைத்தும் அளந்து கலாபம்
பராவியே—எழில்—மேவியே—இசை
அந்தம் அறிந்து நடந்து வளைந்துநின்
றாடுமே—மயில்—ஆடுமே—உச்சிக்
கொண்டை குலுங்கக் குடைந்து வள்ர்ந்துமுன்

நோக்கியே—பதம்—தூக்கியே—கொக்கக்
கோவென வானவர் தேவனே வாவெனக்
கூவுமே—சேவல்—கூவுமே—அயில்
மண்டலம் ஏழும் நொடிக்குள் சுழன்றொளி
காட்டுமே—வினை—ஓட்டுமே—அன்பர்
வாக்கில் விளங்கி வழித்துணையாய் உயிர்
காக்குமே—அருள்—பூக்குமே—அதைத்
கண்டுகளிக்கும் மகோன்னத வாழ்விது
பாருமே—எண்ணிப்—பாருமே—அன்னை
கௌரியின் இன்பக் கரும்பெனும் கந்தனை
பாடுமே—பாட—வாருமே

15 பத்தி எனும்வலை தேடி அகப்படும்
பாதமே—குகன்—பாதமே—அந்தப்
பாதம் பணிந்தவர் பார்வையினால் வரும்
போதமே—ஞான—போதமே—சுத்த
ஸத்துவமாம்சிவ தத்துவ மாமயில்
ஏறுவான்—பொருள்—கூறுவான்—தன்னைத்
தாங்கும் விநாயகன் உந்தியிலே தாளம்
போடுவான்—வினை—யாடுவான்
அத்துவிதம் பரமாத்தும சத்தியம்
அக்ஷரம்—சுயம்—நிர்க்குணம்—ஸச்சி
தானந்தம் நாதகலாந்தம் அகோசரம்
அற்புதம்—பரம்—உத்தமம்
முத்தி சுகம்தரும் நித்திய வாழ்விது
பாருமே—எண்ணிப்—பாருமே
முத்தமிழ் நாயகன் முத்துக் குமரனைப்
பாடுமே—பாட—வாருமே

16 வந்தவர் உள்ளம் குளிர்ந்து வணங்கிடும்
கோயிலாம்—மலர்க்—கோயிலாம்—அயன்
மாமறையோதி மகிழ்ந்து வலஞ்செயும்
கோயிலாம்—மணிக்—கோயிலாம்—மந்தன்
அந்தகனும் தொட்டராவணம் காத்தருள்

கோயிலாம்—அருட்—கோயிலாம்—பர
மாத்தும சித்தர் நிரந்தரம் தங்கிடும்
கோயிலாம்—ஞானக்—கோயிலாம்—எங்கள்
சொந்தமெனச் சொல்லும் தொண்டர் திரண்டெழும்
கோயிலாம்—அன்புக்—கோயிலாம்—நீலத்
தோகையிலேறிய ஜோதி சொரூபனின்
கோயிலாம்—தமிழ்க்—கோயிலாம்—எங்கும்
மந்திரவேல் விளையாடிடும் கோயிலைப்
பாருமே—நின்று—பாருமே—ஜெய
மங்களவள்ளி தெய்வானை மணாளனைப்
பாடுமே—பாட—வாருமே

17 கோடிவரம் தரும் கோபுரம் ஓங்கிய
கோயிலாம்—தனிக்—கோயிலாம்—அன்பர்
குன்றென மோதகம் கூட்டிக் குவித்திடும்
கோயிலாம்—பெரும்—கோயிலாம்—அது
மூடிகவாகனன் மூல விநாயகன்
கோயிலாம்—ஆதிக்—கோயிலாம்—கால
மூன்றும் கடந்து முளைத்து வளர்ந்திடும்
கோயிலாம்—செல்வர்—கோயிலாம்
ஈடிணையற்ற மகான்களை ஈர்த்திடும்
கோயிலாம்—கவிக்—கோயிலாம்—அவன்
ஏகன்கணேசன் என் ஐங்கரன் மூர்த்தியின்
கோயிலாம்—இன்பக்—கோயிலாம்—துதி
பாடிடும் வேளையில் ஆடிடும் தெய்வத்தைப்
பாருமே—வந்து—பாருமே—எந்தன்
பக்கல் இருந்தருள் விக்கின ராஜனைப்
பாடுமே—பாட—வாருமே.

23307

ராஜா பிரஸ், பொள்ளாச்சி.